**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI (CHAPTER XXIII BNSS)**

**CC.NO-134/2023**

**Dated :31.01.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW2 Examined as PW3 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவானந்தம் | வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | பெருமாள் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சேவியர்குடிகாடு | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன மணிகண்டன் எனது பக்கத்து தெருகாரர் ஆவார். கடந்த 23.03.2021 ஆம் தேதியன்று, மாலை சுமார் 4 மணியளவில், நான் கந்தர்வக்கோட்டை- கறம்பக்குடி மெயின் ரோடு ஓரத்தில் உள்ள எனது வீட்டில் இருந்த போது, சத்தம் கேட்டு வந்து பார்த்த போது, ஒரு டாரஸ் லாரியின் அடியில், மணிகண்டன் அடிபட்டு மாட்டிக்கொண்டிருந்தார், லாரிக்கு முன்னால் அவர் வந்த பல்சர் இருசக்கர வாகனம் கிடந்தது. லாரியை ஓட்டி வந்த ஓட்டுநர் லாரியில் இருந்து இறங்கி ஓடி விட்டார். நான் பார்ப்பதற்குள் லாரியின் ஓட்டுநர் ஓடி விட்டதால், தற்போது அவரை என்னால் அடையாளம் காட்ட இயலவில்லை. லாரி மணிகண்டனின் உடல் மீது ஏறி இருந்ததால், மணிகண்டன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவரது பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.1 மற்றும் இறந்து போன மணிமாறன் எனக்கு உறவினரா என்றால் ஊர்க்காரர் ஆவார். நான் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றாலும் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எந்த பெயர் கொண்ட போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் போலிசார் பெயர் தெரியவில்லை. போலிசார் புகைப்படம் மட்டும் தான் எடுத்தார்கள் என்றாலும் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல, அந்த நேரத்தில் நடந்ததை விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, நான் தான் போலிசாரிடம் சொன்னேன்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO-134/2023</u>**

**Dated :31.01.2026**

**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW6 Examined as PW4 (Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | வயது | : | 44 |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | சேவியர்குடிகாடு | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 24.03.2021 ஆம் தேதி, மாலை சுமார் 06.30 மணியளவில், சேவியர்குடிகாடு காலனித்தெருவில், சாலை வளைவிற்கு அருகில், மணிகண்டன் என்பவர் இருசக்கர வாகனத்தில், வந்து கொண்டிருந்த போது, பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டதை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது, கந்தர்வக்கோட்டை போலிசார் அங்கு வந்து, அடிபட்ட இடத்தினை வரைபடம் வரைந்தார்கள். அதற்காக நானும், முனியமுத்து என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) அ.சா.1 எனக்கு ஒன்றுவிட்ட சித்தப்பா மகன் முறை ஆவார். இவ்வழக்கு விபத்தில் இறந்து போன மணிமாறன் எனக்கு தம்பி முறை ஆவார். பார்வை மகஜரில் எழுதப்பட்ட கையெழுத்து என்னுடையது இல்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை எந்த பெயர் கொண்ட போலிசார் விசாரித்தார் என்றால் பெயர் தெரியவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**